ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## திருமங்கையாழ்வார்
## வாழி திருநாமம்

கலந்த திருக்கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியில் குறையலூர்க் காவலோன் வாழியே
நலம் திகழ் ஆயிரத்து எண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்தும் ஆறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கு எழுகூற்றிருக்கை இருமடல் ஈந்தான் வாழியே
இம்மூன்றில் இருநூற்று இருபத்தேழு ஈந்தான் வாழியே
வலம் திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர் கோன் வாழியே

ஐயன் அருள்மாரி செய்ய அடி இணைகள் வாழியே
அந்துகிலும் சீராவும் மணி அரையும் வாழியே
மையிலகு வேல் அணைத்த வண்மை மிகு வாழியே
மாறாமல் அஞ்சலி செய் மலர்க் கரங்கள் வாழியே
செய்ய கலனுடன் அலங்கல் சேர் மார்பும் வாழியே
திண்புயமும் பணிலம் அன்ன திருக்கழுத்தும் வாழியே
மையல் செய்யும் முக முறுவல் மலர்க் கண்கள் வாழியே
மன்னு முடித் தொப்பாரம் வளையமுடன் வாழியே

---